இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

திருமுழுக்குப் பெற்றவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. திருத்தூதர் வழியாகப் பல அருஞ் செயல்களும் அடையாளங்களும் நிகழ்ந்தன. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலங்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கு ஏற்பப் பகிர்ந்தளித்தனர். (திப 2:42-45)

# கண்ணியமான பணிக்கு ஆம் என்று சொல்லுவோம்

## திருந்தந்தை வலியுறுத்து

வத்திக்கான்: உடன்பிறந்த உறவின் அடிப்படையில் வழிநடத்தப்பட்டு, பருவங்களை ஆய்ந்தறிந்து, வளங்களை வீணாக்காத, எதிர்கால சந்ததியினரை இக்கட்டான நிலையில் விட்டுவிடாத அரசியல்வாதிகளே இன்று நமக்குத் தேவை என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.


தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குனர்களுடன் திருத்தந்தை

கடந்த ஏப்ரல் 3, திங்கட்கிழமையன்று, இத்தாலியில் உள்ள தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குனர்களுக்கு வழங்கிய உரையில் இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பழைய ஏற்பாட்டில் வரும் யோசேப்பின் வாழ்வை எடுத்துக்காட்டாகக் கொண்டு தனது சிந்தனைகளை அவர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

தொழிலாளர்களுக்கிடையேயான ஒற்றுமைப் பிணைப்பின் கொள்கையைப் பகிர்ந்து கொள்ளும் இலட்சக் கணக்கான மக்களின் அன்றாட பணிகள் வழியாகப் பொதுநன்மைப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்று தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மூன்று விதமான வேண்டுகோள்களை முன்வைத்து தனது உரையைத் தொடர்ந்தார்.

### அறிவிக்கப்படாத பணிகள்

முதலாவதாக, அறிவிக்கப்படாத பணிகள் வேண்டாம். காரணம், இது தனிநபருக்கு பொருளாதார நன்மைகளைத் தருவதாகத் தெரிகிறது என்றும், மேலும், இது தொலைதூரத்தில் குடும்பங்கள் பங்களிக்க மற்றும் ஓய்வூதிய முறையை நியாயமான முறையில் அணுக அனுமதிக்கவில்லை என்றும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அறிவிக்கப்படாத பணிகள் தொழிலாளர் சந்தையை சிதைத்து, தொழிலாளர்களை சுரண்டல் மற்றும் அநீதிக்கு ஆளாக்குகிறது என்றும் கவலை தெரிவித்தார்.

### முறைகேடான பணிக்கள்

இரண்டாவதாக, முறைகேடான பணிக்களுக்கு முடியாது என்று சொல்வோம். ஏனென்றால், இது இளைஞர்களின் வாழ்க்கைத் தேர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் சில சமயங்களில், அவர்களை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிறது என்றும், அவநம்பியகையை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தேர்வுகளைத் தள்ளிப்போடுவதை ஊக்குவிக்கிறது என்றும், எச்சரித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### கண்ணியமான பணிகள்

மூன்றாவதாக, கண்ணியமான பணிக்கு ஆம் என்று சொல்லு வோம். நலன் என்பது ஒருவரின் சொந்த மற்றும் பிறரின் நலனில் பங்கேற்பதற்கான ஒரு வடிவம் என்றும், பொருளாதார வளங் களை ஒதுக்கி வைப்பதும், சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகுமுறைகளை உத்தரவாதப் படுத்துவதும் வாழ்க்கையின் வெவ்வேறு பருவங்களை ஒன்றாக வைத்திருக்கக்கூடிய விலை மதிப் பற்ற சொத்துகளாகும் என்றும் தெளிவுபடுத்தினார் திருத்தந்தை. இதைக் காலத்திற்கு ஏற்ற அறிவுறுத்தலாகத் திருஅவை ஏற்க வேண்டும்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மறைக்கல்வி தொடர் பயிற்சி

**கோலாலம்பூர்:** கடந்த மார்ச் 25-ஆம் அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்றல் திறன் பயிற்சி டாக்டர் ஸ்டிபன் செல்வராஜ் மற்றும் அருட்சகோதரி ரீத்தா சவரியண்ணன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பயிற்சியானது கடந்த ஜூலை 2022-லிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடிப்படை மறைக்கல்வி ஒரு வருட பயிற்சியின் ஒரு பகுதியாகும். இந்த ஒரு நாள் பயிற்சியில் ஏறக்குறைய 18 மறைக்கல்வி ஆசிரியர்கள் வெவ்வேறு பங்குகளிலிருந்து கலந்துகொண்டனர்

இந்த மறைக்கல்வி பயிற்சியில் கற்றல் கோட்பாடுகளின் முக்கியத்துவமும் அவற்றின் மூலமாக நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளும் தெளிவாக படைக்கப்பட்டன. மேலும் நடத்தை/ஒழுக்கநெறி, அறிவாற்றல் மற்றும் ஆக்கபூர்வமான நிர்மாணிப்பு ஆகிய 3 கற்றல் கோட்பாடுகளும் அவற்றை பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் மற்றும் வழிமுறைகளும் அருட்சகோதரி ரீத்தா மற்றும் சகோதரி மாணிக்கம் அவர்களால் தெளிவாக கோடிட்டு காட்டப்பட்டன

இப்பயிற்சியில் வெறும் கோற்பாடுகளோடு நின்று விடாமல் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு திறன் பயிற்சியும் தரப்பட்டது. கொடுக்கப்பட்ட தலைப்பில் ஆசிரியர்கள் குழுவாக பிரிந்து


*குழு ஆய்வில் மறைக்கல்வி அசிரியர்கள்...*

தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்



# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மறைக்கல்வி தொடர் பயிற்சி

*முதல் பக்கத் தொடர்ச்சி..*

கலந்துரையாடி தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். இதில் மறைக்கல்வி ஆசிரியர்கள் உற்சாகத்தோடும் முழு ஆர்வத்தோடும் பங்கெடுத்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது மறைக்கல்வி ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனானது இந்த கற்றல் திறன்கள் செயல்பாடு மூலமாக





வலுப்பெற்று தங்களது மறைத்தூது பணியில் இன்னும் அவர்கள் சிறக்க பேருதவியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லைஇந்த பயிற்சியின் அடுத்த பகுதி வருகிற ஏப்ரல் மாதம் நடைபெறும்

ஒவ்வொரு மறைக்கல்வி ஆசிரியரின் கற்பித்தல் முறையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய இந்த பயிற்சியை ஏற்பாடு செய்த ஏற்பாட்டு குழுவினருக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

# அதிகமாகும் சிறார் தொழிலாளர்களின் எண்ணிக்கை

வறுமை, முறையற்ற ஒதுக்கீடுகள் காரணமாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகின்றது என்றும் இது விளையாட்டல்ல தடுத்து நிறுத்தப் படவேண்டிய ஒன்று என்றும் அறிவித் துள்ளது Save the Children அமைப்பு

100 ஆண்டுகளுக்கும் மேலாக சிறார் தொழிலாளர்களின் அநீதிக்கு எதிராகப் போராடி வரும் பன்னாட்டு அமைப்பான Save the Children, இத்தாலியில் சிறார் தொழிலாளர் குறித்த கணக்கெடுப்புச் செய்திகளை வெளியிட்டு அமைப்பின் வரையறைகள், அதன் பண்பு நலன்கள், பரிணாமம் போன்றவற்றையும் விளக் கியுள்ளது.

தொடக்கப் பள்ளியை விட்டு வெளியேறும் சிறார்கள் இத்தாலியில் வணிகம், விவசாயம் கட்டிடப் பணி, உணவுவிடுதி போன்ற வற்றில் ஈடுபட்டு தங்கள் வாழ்வை இழக்கிறார்கள் என்று தெரிவித்துள்ள இவ்வமைப்பு, நவீன உலகின் சமூக தொடர்பு சாதனங்களால் ஆரம்பக் கல்வியை முழுமையாகக் கற்க மாணவர்களால் இயலவில்லை என்றும் கூறியுள்ளது.

7



முதல் 15 வயதுக்குட்பட்ட 3,36,000 சிறார் மற்றும் இளம் பருவத்தினர் 6.8 விழுக்காடு அளவிற்கு அதாவது 15இல் 1சிறார் குழந்தைத்தொழிலாளர்களாகப் பணியாற்று கின்றார்கள் என்றும், 14-15 வயதுடைய 58,000 இளையோர் 27.8 விழுக்காடு பேர் பள்ளிக் கல்வி மற்றும் நல்வாழ்வுக்குத் தீங்கு விளைவிக்கும் வேலைகளில் ஈடுபட் டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

# இறை இரக்கத்தின் ஞாயிறு தோன்றிய வரலாறு அறிவோம்!

போலந்து நாட்டு அருள்சகோதரி, புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா அவர்கள், (ஆக.25,1905– அக்.05,1938), ஓர் இறைக்காட்சியாளர். இறை இரக்க இயேசுவை இவர் காட்சிகளில் கண்டு, அவற்றில் இயேசு அவருக்கு கூறியவற்றை வெளிப்படுத்தியதன் பயனாக, இன்று உலகெங்கும் இறை இரக்கப் பக்தி பரவியுள்ளது. இவர், இறை இரக்கத்தின் தூதர் என்று அழைக்கப்படுகிறார்.

திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அவர்கள், அருள்சகோதரி பவுஸ்தீனா அவர்களை, புனிதராக அறிவித்து, திருஅவையில், உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்துவரும் ஞாயிறு, இறை இரக்க ஞாயிறாகச் சிறப்பிக்கப்படுமாறும் அறிவித் தார். உரோம் மாநகரில் வத்திக்கானுக்கு அருகில் அமைந்துள்ள Santo Spirito in Sassia என்ற ஆலயம், இறை இரக்க ஆன்மீக மையமாகச் செயல்பட்டு வருகிறது.

பவுஸ்தீனா இரக்கத்தின் அன்னை சபையில் 1928, ஏப்ரல் 30ஆம் நாள் துறவற வார்த்தைப்பாடுகளான கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் மூலம் இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்தார். ஹெலன்கா என்ற இயற்பெயரை நற்கருணை ஆண்டவரின் மரிய பவுஸ்தீனா என்று மாற்றினார். “பவுஸ்தீனா என்றால் ஆசீர்வதிக்கப்பட்டவர்” என்று பொருள். 1931ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ஆம் நாள் காட்சி கண்டார். தனது ஆன்ம குருவானவர் அருட்தந்தை மிக்கேல் சொபாகே அவரிடம் தான் கண்ட காட்சியைப்பற்றி கூறினார். இயேசு இறை இரக்கத்தின் அரசராகக் காட்சி அளித்தார். வெள்ளை ஆடை அணிந்திருந்தார். அவருடைய இதயத்தில்



*புனித மரிய பவுஸ்தீனா* கோவால்ஸ்கா.

இருந்து வெள்ளை மற்றும் சிவப்புநிற ஒளி பாய்ந்து வந்தது. இதனை அப்படியே வரைந்து அதன் கீழ் “இயேசுவே உம்மில் நான் நம்பிக்கை வைக்கிறேன்” என்று எழுதும்படி கூறினார் என்றார்.

ஒருமுறை போலந்தில் கொடுங்காற்று டனும், இடிமின்னலுடனும் மழை பெய்தது. இயற்கையில் பலவிதமான மாற்றங்கள் நிகழ்ந்தன. பேரழிவு ஏற்பட்டதைப் பார்த்து பவுஸ்தீனா இறைவனால் கற்றுத்தரப்பட்ட இரக்கத் தின் செபமாலை செபித்தார். உடனே காற்றும், இடி மின்னலுடன் கூடிய மழையும் நின்றது. நற்கருணையின் பவுஸ்தீனா உடல் நலக்குறைவினால் 1938ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் இயற்கை எய்தினார்.

*அருட்சகோதரி மேரி ஆனந்த்*

**‘இரக்கத்திற்கான அழைப்பு நம்மிடமிருந்து வெறும் பரிதாபத்தை அன்று, மாறாக மனித அவலங்களை எதிர்கொண்டு வெற்றி பெற நமது முழுமையான ஈடுபாட்டை எதிர்பார்க்கிறது.**
**(இ உ. திருஅவை, எண் 1)**

# கிறிஸ்துவின் மேல் கொண்ட நம்பிக்கை வாழ்வாகட்டும்!

இரக்கத்தின் வடிவே இறைவன் என்பதை, எல்லா மதங்களும் ஆணித்தரமாகச் சொல்கின்றன. இரக்கமே உருவான இறைவனைக் கொண்டாட திருஅவை நம்மை இன்று அழைக்கிறது. உயிர்ப்பு விழாவுக்கு அடுத்து வரும் ஞாயிறை, இறை இரக்கத்தின் ஞாயிறு என்று போற்றுகிறது. திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம், நம்பிக்கையின் இரண்டாவது நிலையை, அதாவது நம்பிக்கையானது பெயரளவில் இருந்துவிடாமல், செயல்வடிவில் இருக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்கின்றது.

தொடக்கக்காலக் கிறிஸ்தவர்கள், திருத் தூதர்கள் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம்பிடுவதிலும் இறைவேண்டலிலும் நிலைத்திருந்தார்கள் என்று வாசிக்கின் றோம். இவர்கள் இப்படி இருந்ததால் இவர்களிடம் ஒருங்கமைவும் பகிர்வும் பெருகின. இதன் பயனாக இவர்கள் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றார்கள். இறுதியில் மற்ற மக்கள் இவர்களோடு சேர்ந்தார்கள் என்றும் வாசகத்தின் வழி அறிகிறோம். ஆம், தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களின் நம்பிக் கையில் வேரூன்றிய வாழ்வு அல்லது நம்பிக்கைக்குச் செயல்வடிவம் கொடுத்த வாழ்வு, கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை மேலும் மேலும் உயர்த்தியது. அப்படியா னால், நாம் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றோம் என்றால், நமது கிறிஸ்தவ வாழ்வைப் பார்த்து பிறர் நம்மில் இணைய வேண்டும்.

புனித பேதுரு எழுதிய முதல் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகம், நம்பிக்கையின் அடுத்த நிலையை நமக்கு எடுத்துக்கூறுகின்றது. அதுதான் இயேசுவின் மீதுகொண்ட நம்பிக்கையில் துன்பங்களுக்கு நடுவிலும் நிலைத்திருப்ப தாகும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய வழியில் நடக்கின்றபோது அல்லது நம்பிக்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கிறது. அவ்வாறே வாழ்கின்றபோது துன்பங்கள் வரலாம்; சோதனைகள் வர லாம். இவற்றைக் கண்டு துவண்டுபோய் விடக் கூடாது. எப்படி பொன் நெருப் பினால் புடமிடப்படுகின்றதோ, அதைப் போன்று துன்பங்களால் நம்முடைய நம்பிக்கை புடமிடப்படும் என்பது திண்ணம்.

அதே வேளையில், யோவான் நற்செய்தி நம்பிக்கையின் முதன்மையான நிலையை நமக்கு எடுத்துச் சொல்கின்றது. அதுதான் காணாம லேயே நம்புவதாகும். ஆம், கண்டால்தான் நம்புவேன் என்பது நம்பிக்கையல்ல, காணாமலேயே நம்ப வேண்டும் (எபி 11:1) அதுதான் நம்பிக்கையாகும். இது திருத்தூதர் தோமா தொடக்கத்தில் கொண்ட நம்பிக்கைக்கு எதிரானதாகும்.

உயிர்த்த இயேசு தங்களுக்குத் தோன்றிய செய்தியை மற்ற சீடர்கள் தோமாவிடம் சொல்கின்றபொழுது, அவர் நம்ப மறுக்கின் றார். பின்னர் உயிர்த்த ஆண்டவரை அவர் கண்டபிறகு நம்புகின்றார். அப்பொழுது தான் இயேசு அவரிடம், “நீ என்னைக் கண்டதால் நம்பினாய்; காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்று கூறுகின்றார். ஆம், நாம் காணாமலே நம்பினோம் என்றால் பேறுபெற்றோர் ஆவோம்.

கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டிருக் கின்ற நாம், நம்பிக்கையை வாழ்வாக்கு வோம்; அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

*-ஆர்.கே.*

**பாஸ்கா 2-ம் ஞாயிறு – இரக்கத்தின் ஆண்டவர்**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | திப 2: 42-47 |
| தி. பாடல் | 118: 2-4. 13-15. 22-24 |
| 2-ம் வாசகம்: | 1 பேதுரு 1: 3-9 |
| நற்செய்தி: | யோவான் 20: 19-31 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- பாஸ்கா 2ம் ஞாயிறு**